KANTON AARGAU

**DEPARTEMENT**
**BILDUNG, KULTUR UND SPORT**
Vorsteher

**Alex Hürzeler**, Regierungsrat
Bachstrasse 15, 5001 Aarau
www.ag.ch/bks

பெறுனர்:
ஆர்காவ் ஆரம்பப் பள்ளியின்
மாணவர்களின் பெற்றோர்

மார்ச் 30, 2020

**கொரோனா வைரஸ் தொற்றுநோய்களின் போது தொலைதூர கற்றல் மற்றும் குழந்தை பராமரிப்பு சேவைகள்**

அன்புள்ள பெற்றோர்களே,

மார்ச் 13, 2020 இன் பெடரல் கவுன்சிலின் முடிவின்படி, நேருக்கு நேர் கற்பித்தல் வகுப்புகள், எனவே அனைத்து பள்ளிகளிலும் வழக்கமான வகுப்புகள் மார்ச் 16, 2020 முதல் தடைசெய்யப்பட்டுள்ளன. ஏப்ரல் 19, 2020 அன்று வசந்த கால (Frühling) இடைவேளை முடிவடையும் வரை இந்த உத்தரவு செல்லுபடியாகும். ஆர்காவ் மண்டலத்தில், வழக்கமான பள்ளி வகுப்புகள் வசந்த கால இடைவேளை வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. மேலும், வீட்டில் குழந்தை பராமரிப்பு உத்தரவாதம் இல்லாத மாணவர்களுக்காக ஒரு குழந்தை பராமரிப்பு சேவை அமைக்கப்பட்டுள்ளது, ஏனெனில் எடுத்துக்காட்டாக, பெற்றோர் வேலை செய்ய வேண்டும் அல்லது குழந்தை பராமரிப்பு ஆபத்திற்குட்பட்ட ஒரு பிரிவுக்கு மாற்றப்பபடும் நிலை ஏற்படலாம்.

தற்போதைய அசாதாரண நிலைமை நீண்ட காலத்திற்கு தொடரும் என்றும், வசந்த கால இடைவெளிக்குப் பிறகும் பள்ளிகளில் நேருக்கு நேர் கற்பிக்கும் வகுப்புகளை பெடரல் கவுன்சில் தொடர்ந்து தடை செய்ய வேண்டும் என்றும் கருதலாம்.

அதனால்தான் கல்வித்துறை, கலாச்சாரத்துறை மற்றும் விளையாட்டுத் துறை ஆகியவற்றை ஒருங்கிணைத்த பி.கே.எஸ்(BKS)இன்று 2020 ஏப்ரல் 20 முதல் "தொலைதூரக் கல்வி" வடிவத்தில் கற்பிப்பதைக் கட்டுப்படுத்தும் ஒரு அறிவுறுத்தலை வெளியிட்டது

மேலும், வசந்த கால இடைவெளியிலும் பள்ளிகள் தொடர்ந்து கொரோனா வைரஸ் தொற்றுநோய்களின் போது அமைக்கப்பட்ட குழந்தை பராமரிப்பு சேவைகளை தொடர்ந்து செயலாற்ற பள்ளிகள் அறிவுறுத்த படுகின்றன.

தொலைதூரக் கற்றல் என்பது மாணவர்கள் வழக்கம் போல் வீட்டில் கற்றுக்கொள்வதும் வேலை செய்வதுமாகும் மற்றும் அறிவு பரிமாற்றம் தூரத்திலிருந்து செய்யப்படும். கற்பிப்பதற்கு எப்போதும் போல பள்ளியே பொறுப்பு. ஆனால் வழக்கத்திற்கு நேர்மாறாக, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுடன் தினசரி நடைமுறையொழுங்குகளை திட்டமிடுவதற்கும், சுயாதீனமான கற்றலுக்காக வீட்டிலேயே மிகவும் பொருத்தமான பணியிடங்களை அவர்களுக்கு வழங்குவதற்கும் பொறுப்பாவார்கள். ஒருபுறம், உள்ளூர் பள்ளிகள் தொலைதூரக் கல்வியை பள்ளியின் சாத்தியங்கள் மற்றும் தேவைகள் மற்றும்

பள்ளி நிலைகள்,  மற்றும் மறுபுறம், வீட்டில் உள்ள மாணவர்களின் தேவைகளுக்கு ஏற்ப  அமுலுக்குக் கொண்டு வருகின்றன.

உங்கள் புரிதலுக்கும் நல்ல ஒத்துழைப்பிற்கும் நன்றி.  தற்போதைய சூழ்நிலையை சமாளிக்க நீங்கள் ஒரு முக்கிய பங்களிப்பை செய்கிறீர்கள்.

அன்புடன்



Alex Hürzeler அரசு கவுன்சிலர்